Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 36 · சனிக்கிழமை Saturday · 06.12.2025 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## ரூ.1003 கோடி முதலீடு:

# காஞ்சிபுரத்தில் மின்னணு சாதன கண்ணாடி தொழிற்சாலை

## முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்




" காஞ்சிபுரம் அருகே 1003 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மின்னணு சாதனங்களுக்கான கண்ணாடி பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை முதலமைச்சர் திறந்து வைத்தார்"

காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

1003 கோடி ரூபாய் முதலீட்டில்..

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் இந்தியநாட்டைச்சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited – BIG TECH) நிறுவனம், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன்–கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் டாலர்

இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030–க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட கார்னிங் இண்டர்நேஷனல் நிறுவனம் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கைபேசிகள், மடிக்கணினிகள் மற்றும் கைக்கணினிகளில் பயன்படுத்தப்படும் வலுவூட்டப்பட்ட "கார்னிங் கொரில்லா" கிளாஸ் உற்பத்தி மேற்கொள்ளும் நிறுவனம் ஆகும். ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் நிறுவனம், இந்தியாவில் கைபேசி உபபொருட்கள் மற்றும் மடிக்கணினி உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த நிறுவனம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (Bharat Innovative Glass Technologies Private Limited – BIGTECH)

பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் நிறுவனம், கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் மற்றும் ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாகும். இந்நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், நவீன தொழில்நுட்பத்துடன் முன்–கவர் கண்ணாடி (Front – cover glass) உற்பத்தி ஆலை அமைத்துள்ளது. இத்திட்டத்தில் உருவாக்கப்படும் பொருட்கள், நாட்டிலேயே முதன் முறையாக Precision glass processing தொழில் நுட்பத்தில் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்கும்.

இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2024–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்டு, அதே ஆண்டு ஜூன் மாதம், இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. அடிக்கல் நாட்டி வைத்த 17 மாதங்களில் இத்திட்டத்தின் உற்பத்தியை இன்று தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் நிலவும் வணிகம் புரிதலுக்கான சூழலமைப்பு சிறப்பாக உள்ளதற்கு இது சிறந்த சான்றாகும் என அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூடங்குளம் மின் நிலையம் மூலம் மக்களுக்கு மலிவான விலையில் மின்சாரம் கிடைக்கிறது; டெல்லியில் ரஷ்ய அதிபர் புதின் பேச்சு




புதுடெல்லி,

டெல்லி ஐதராபாத் இல்லத்தில் இந்தியா – ரஷ்யா இடையேயான 23–வது மாநாட்டிற்கு பின் இரு தலைவர்களும் செய்தியாளர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்தனர்.

அப்போது பிரதமர் மோடி கூறியதாவது:–

பயங்கரவாதத்தை எதிர்க்க உலகளாவிய ஒற்றுமை தேவை.பயங்கரவாதம் என்பது மனிதகுலத்தின்மீதானநேரடி தாக்குதல். பகல்காம் தாக்குதலாகட்டும் குரோக்ஸ் நகர கோழைத்தன தாக்குதலாகட்டும் அனைத்திற்கும் பயங்கரவாதமே காரணம். பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவும் ரஷியாவும் தோளோடுதோள் நின்று வருகின்றன என்றார்.

அதனை தொடர்ந்து ரஷிய அதிபர் புதின் பேசியதாவது:–

ரஷியகுழுவினருக்கும் இந்திய ஜனாதிபதி, பிரதமர் அளித்த அன்பான உபசரிப்புக்கு நன்றி. ரஷிய தூதுக்குழுவுக்கு அளித்த விருந்தோம்பலுக்கு, இரவு விருந்திற்காக பிரதமர் மோடிக்கு நன்றி.

பிரதமர் மோடி தலைமையில் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது.மோடி எனக்கு மிகவும் நம்பிக்கையான நண்பர். எங்களுக்குள் மிகவும் நம்பிக்கையான, ஆழமான நட்பு உறவு இருக்கிறது. மனம் திறந்து உண்மையாகவே இதை சொல்கிறேன். இந்தியாவையே தன் மூச்சாக அவர் சுவாசிக்கிறார். அவர் பிரதமராக கிடைத்தது இந்தியாவுக்கேஅதிர்ஷ்டம். ரஷியா, பெலாரசில் இருந்து இந்திய பெருங்கடல் வழியே சர்வதேச வடக்கு–தெற்கு போக்குவரத்து வழித்தடம் தொடங்கப்படும். சென்னை –விலாட்வாஸ்டோக் திட்டத்தால் இந்தியாவில் இளைஞர்களின் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது. பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் கலாச்சாரத் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நாங்கள் தீர்மானித்துள்ளோம். மேலும், இருதரப்பு வர்த்தகத்தை ஆண்டுக்கு 100 பில்லியன் டாலர் என்ற அளவுக்கு அதிகரிப்பது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம். இருதரப்பு வர்த்தகத்துக்கு தேசிய நாணயங்களைப் பயன்படுத்துவதை நோக்கி இந்தியாவும் ரஷ்யாவும் படிப்படியாக நகர்கின்றன.

சிறிய அணு உலைகள் மற்றும் மிதக்கும் அணுமின் நிலையங்களை நிர்மாணிப்பது குறித்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். புதிய சர்வதேச தளவாட வழித்தடங்களை உருவாக்க ரஷ்யாவும் இந்தியாவும் இணைந்து செயல்படுகின்றன.

ரஷ்யா–இந்தியா உறவு என்பது வரலாற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இதில், வார்த்தைகள் முக்கியமல்ல. சாராம்சம் தான் முக்கியமானது. இருதரப்பு ஒத்துழைப்பை முன்னேற்றுவதில் பிரதமர் மோடி தனிப்பட்ட முறையில் ஈடுபாடு காட்டி வருகிறார். அதை நான் மிகவும் பாராட்டுகிறேன். நாங்கள் பல்வேறு துறைகளில் முன்னேற திட்டமிட்டுள்ளோம். இது எங்கள் உறவில் உள்ள நம்பிக்கையின் அளவை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

செயற்கைநுண்ணறிவு, விமான மேம்பாடு, உயர் தொழில்நுட்பம், விண்வெளி ஆய்வு ஆகியவற்றில் இந்தியாவும் ரஷ்யாவும் ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன" என தெரிவித்தார்.

பொருளாதார ஒத்துழைப்பு திட்டத்தை 2030 வரை தொடர நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம். இரு நாடுகள் இடையே இன்று சுகாதாரம், கப்பல் போக்குவரத்து, ரசாயனங்கள் உள்ளிட்ட பல துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இது நமது வர்த்தகம் மற்றும் முதலீடு பன்முகத்தன்மை கொண்டதாகவும் சமநிலையானதாகவும் நிலையானதாகவும் இருப்பதை உறுதி செய்யும்" என தெரிவித்துள்ளார்.

புதிய சர்வதேச போக்குவரத்து மற்றும் தளவாட வழித்தடங்களை உருவாக்க இணைந்து செயலாற்றுவோம். அணு மின் நிலையத்திட்டங்கள் இந்தியாவின் தொழில்கள், வீடுகளுக்கு மலிவான, சுத்தமான மின்சாரத்தை தரும். 6 அணு உலைகளில் ஏற்கனவே 2–ல் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. அணு உலையை முழு பயன்பாட்டுக்கு கொண்டு வருவது இந்தியாவின் எரிசக்தி தேவைக்கான பங்களிப்பை தரும். தமிழ்நாட்டில் முக்கியத்திட்டத்தை செயல்படுத்துகிறோம். கூடங்களும்மின்நிலையம் மூலம் மக்களுக்கு மலிவான விலையில் மின்சாரம் கிடைக்கிறது. கடந்தாண்டு இந்தியா – ரஷியா வர்த்தக வருவாய் 12 சதவீதம் அதிகரித்து மற்றொரு சாதனை படைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிலும் இருதரப்பு வர்த்தகம் 100 பில்லியன் டாலர் அளவுக்கு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்தியா – ரஷியா இடையே சுதந்திர வர்த்தக மண்டலத்தை உருவாக்குவது வணிக வளர்ச்சிக்கு உதவும்.

அமெரிக்காவுக்கு எங்கள் நாட்டின் எண்ணெய் வாங்க உரிமை இருக்கும்போது, இந்தியாவுக்கு ஏன் அந்த உரிமை இருக்கக்கூடாது? அமெரிக்க அதிபர் டிரம்ப்புடன் இந்த விவகாரம் குறித்து விவாதிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தன்னிகரற்ற ஆளுமை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி புகழஞ்சலி



சென்னை:

நூற்றாண்டு கனவு நோக்கி அதிமுக பீடுநடை போடுவதற்கு அடித்தளமிட்ட தன்னிகரற்ற ஆளுமை ஜெயலலிதாஎன அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

"மக்களால் நான்; மக்களுக்காக நான்" என்ற குரலுக்கு சொந்தக்காரரர் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலிலதா.

அவரது 9 ஆம் ஆண்டு நினைவு நாள் (டிச.5) அனுசரிக்கப்படுகிறது. முன்னாள் முதல்வரும் அதிமுக பொதுச்செயலருமான எடப்பாடி கே.பழனிசாமி எக்ஸ் பக்கத்தில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், அதிமுக தொண்டர்களின் இதயத்துடிப்பில் அன்றும், இன்றும், என்றும் வாழும் எங்கள் இதயதெய்வம் ஜெயலலிதா, "மக்களால் நான்; மக்களுக்காக நான்" என்ற தவவாழ்விற்கே தன்னை அர்ப்பணித்து, உலகெங்கும் உள்ள தமிழர்கள் வாழ்வெல்லாம் மலர வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு ஒவ்வொரு திட்டத்தை யும் தாயுள்ளத்தோடு பார்த்து பார்த்து அளித்த ஒப்பற்ற தலைவி. நூற்றாண்டு கனவு நோக்கி அதிமுக பீடுநடை போடுவதற்கு அடித்தளமிட்ட தன்னிகரற்ற ஆளுமை. இன்று வரையிலும், இனியும் எனது ஒவ்வொரு செயலுக்கு பின்னால் இருக்கும் எனது அரசியல் வேத நிலையம். இதயதெய்வம் புரட்சித் தலைவி ஜெயலலிதாவை, அவர்தம் 9 ஆம் ஆண்டு நினைவு நாளில் போற்றி வணங்குகிறேன். தமிழ்நாட்டைப் பிடித்துள்ள தீயசக்தி திமுக குடும்ப ஆட்சியை வீழ்த்தி, "அமைதி, வளம், வளர்ச்சி" என்று ஜெயலலிதா காட்டிய வழியில் தமிழ்நாட்டை செலுத்தும் மக்களுக்கான நல்லாட்சியை அதிமுக தலைமையில் 2026 பேரவைத் தேர்தலில் வாயிலாக நிறுவி, ஜெயலலிதாவின் பொற்பாதங்களில் சமர்ப்பிப்பதே, அவர்களுக்கு நாம் செலுக்கும் உண்மையான புகழஞ்சலி! என கூறியுள்ளார். இதையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது அவர் கருப்பு சட்டை அணிந்திருந்தார். அங்கு முன்னாள் அமைச்சர்கள், அ.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் திரண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் கருப்பு சட்டை அணிந்திருந்தனர்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கல்லணை கிராமத்தில் மக்களைப் பாதிக்கும் கல்குவாரிகளை அரசு உடனடியாக மூட வேண்டும்

## நா.த.க. தலைவர் சீமான் பேட்டி




மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே கல்லணை, அட்சங்குளம், டி.புதூர் மற்றும் நெடுங்குளம் பகுதிகளில் சட்டத்திற்குப் புறம்பாக 300 அடிக்கும் மேல் ஆழமாகத் தோண்டப்பட்ட 15 கல்குவாரிகள் செயல்பட்டு வரும் நிலையில்,புதிதாக3 கல்குவாரிகளை அமைக்க தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது வன்மையான கண்டனத்துக்குரியதாகும். ஏற்கனவே உள்ள கல்குவாரிகளையே மூட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் நெடுங்காலமாகப் போராடி வரும் நிலையில், அதனைச் சிறிதும் மதியாது புதிதாக 3 கல்குவாரிகளை அமைக்க திமுக அரசு அனுமதித்துள்ளது எதேச்சதிகாரப்போக்கின் உச்சமாகும்.

திருமங்கலம் பகுதியில் முறைகேடாக இயங்கும் கல்குவாரிகளால்நிலத்தடி நீர்மட்டம் முற்றாகக் குறைந்து 800 ஏக்கர் பாசன விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் தங்களது கிராம காவல் தெய்வமான மலை மேல் உள்ள ஐயனார் கோவில் அழியும் நிலையில் உள்ளதாகவும், குவாரி உரிமையாளர்கள் இந்தப் பகுதி விவசாய நிலங்களுக்கு வரும் தண்ணீரைத் திறக்க விடாமல் சதி செய்து வருவதாகவும் கல்லணை கிராமப் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மேலும், அனுமதியின்றி அதிகளவில் பள்ளம் தோண்டுவதோடு, வெடிகளை வைத்து தகர்த்துக் கற்களை வெட்டி எடுப்பதால் வீடுகளில் விரிசல் ஏற்படுவதோடு, குவாரி தூசிகளால் ஆஸ்துமா உள்ளிட்ட நோய்களையும் அப்பகுதி மக்கள் சந்தித்து வருகின்றனர். இதுகுறித்து தொடர் போராட்டங்களை மக்கள் முன்னெடுத்தும், அதிகாரிகள் முதல் ஆட்சியாளர்கள் வரை பலமுறை மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, கல்குவாரி முதலாளிகளுக்கு ஆதரவாக மக்களின் அறப்போராட்டத்தை திமுக அரசு அடக்க முனைவது இந்த அரசு யாருக்கானது என்றகேள்வியைஎழுப்புகிறது. இரு திராவிடக்கட்சிகளின் ஆட்சியிலும் தமிழ்நாட்டின் இயற்கை வளங்களான மலைகள், ஆறுகள், ஏரிகள், காடுகள், விளைநிலங்கள் ஆகியவை தொடர்ந்து கொள்ளை போகக் கூடிய சூழல் உருவாக்கப்படுவதும் அதனை எதிர்த்துப் போராடுவதுமே தொடர்கதையாகி விட்டது. வளத்தைச் சுரண்டுவது எப்படி வளர்ச்சியாகும்? அதிலும் மனிதர்களால் உருவாக்கவே முடியாத இயற்கை அன்னையின் கொடைகளான மலைகள், ஆறுகள் போன்றவற்றை முற்றாக அழிக்கும் செயலில் ஈடுபடுவதும், ஈடுபடுவோரை அனுமதித்து அரசே வேடிக்கைபார்ப்பதென்பதும் அடுத்த தலைமுறைக்கு நாம் செய்யும் பெருந்துரோகமாகும்.

திராவிடக் கட்சிகளின் 60 ஆண்டுகால ஆட்சிக்காலத்தில் கல்குவாரிகளுக்காகவும், மலை மணலுக்காகவும், கிரானைட் உள்ளிட்ட கனிம வளத்திற்காகவும் ஏராளமான மலைகள் மற்றும் குன்றுகள் வெட்டி எடுக்கப்பட்டுவிட்டன. அறியாமையால் மக்கள் அதனைத்தடுத்துநிறுத்த தவறியதால் இன்றளவும் அதற்காக வருந்திக்கொண்டிருக்கின்றோம். ஆனால், நாம் தமிழர் கட்சி இந்த மண்ணில் வந்த பிறகு சுற்றுச்சூழல் குறித்து ஏற்படுத்திய தொடர் பரப்புரையின் விளைவாக விழிப்படைந்துள்ள மக்கள் தற்போது தாங்களே போராடத் தொடங்கியுள்ளனர். ஆனால், அதனையும் திமுக அரசு அதிகார கொடுங்கரம் கொண்டு அடக்கி ஒடுக்க முனைவது கொடுங்கோன்மையாகும். கடந்த காலங்களில் வெட்டப்பட்ட மலைகள், அழிக்கப்பட்ட ஆறுகள், காவு கொடுக்கப்பட்ட காடுகள், மூடப்பட்ட நீர்நிலைகள் ஆகியவற்றால் காலநிலை மாற்றம், புவி அதிக வெப்பமாதல் ஆகிய பாதிப்புகளை இன்று நாம் சந்தித்து வருகின்றோம். சாதி, மதத்தைக் காப்பாற்றுவதற்கும் அதற்காகப் போராடுவதற்கும் இங்கு பல கட்சிகள், இயக்கங்கள் உண்டு; ஆனால் இயற்கை அன்னையை, பூமித்தாயைக் காப்பாற்ற எவரும் முன்வருவதில்லை. அதற்காக எவரும் குரல் கொடுப்பதுமில்லை. இயற்கை வளங்கள் யாவற்றையும் அழித்துவிட்டு அடுத்த தலைமுறையின் நல்வாழ்விற்கு நாம் எதனை விட்டுச்செல்லப் போகிறோம்? என்ற கேள்விக்கு இங்கு எவரிடத்தில் பதில் இருக்கின்றது. ஆகவே, மக்களின் போராட்டத்திற்கு மதிப்பளித்து மதுரை மாவட்டம் கல்லணை கிராமத்தில் மக்களைப் பாதிக்கும் கல்குவாரிகளை தமிழ்நாடு அரசு உடனடியாக மூட வேண்டுமென வலியுறுத்துகிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.



# சங்கரன்கோவிலில் அதிமுக சார்பில் ஜெயலலிதா நினைவு தினம்

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பழைய பேருந்து நிலையம் அருகே அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவு தினம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு முன்னாள் அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் வி.எம் ராஜலட்சுமி ஜெயலலிதாவின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் மாநில எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் சுப்பையா பாண்டியன், துணைச் செயலாளர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் காளிராஜ், மாவட்ட பொருளாளர் சண்முகையா, விவசாய அணி செயலாளர் பரம குருநாதன், நகர செயலாளர் ஆறுமுகம், மாவட்ட அம்மா பேரவை தலைவர் எஜமான் செந்தில்குமார்,ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ், முத்துப்பாண்டி, செல்வராஜ் சிறுபான்மை பிரிவு தலைவர் சௌந்தர் என்ற சாகுல் ஹமீது, மாவட்ட எம்ஜிஆர் மன்றதுணைச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், இலக்கிய அணி தலைவர் ராமநாதன்,தலைமைக் கழக பேச்சாளர்கள் தீக்கனல் லட்சுமணன், ராமசுப்பிரமணியன்,மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி துணைச்செயலாளர் ஆர்சி மாரியப்பன், அம்மா பேரவை இணைச் செயலாளர் வழக்கறிஞர் ராமேஸ்வரன்,சிவராமகிருஷ்ணன், கணேசன்,ராம்குமார்,நகர் மன்ற உறுப்பினர்கள் தமிழ்செல்வன், பரமசிவன்,மாரிச்சாமி,முத்துலெட்சுமி, அண்ணாமலை புஷ்பம், ராஜேஸ்வரிகந்தன்,எஸ்.டி.எஸ் சரவணகுமார், நிர்வாகிகள் நிவாஸ்,கோபால் ரத்தினம்,குருசாமி,

முத்து மணிகண்டன், சுந்தரபாண்டியன், எம்.எஸ்.கே. முப்பிடாதி, அண்ணா தொழிற்சங்கம்ஹரிஹரகருப்பையா, குருவிகுளம் ஒன்றிய துணைச் செயலாளர் கோவிந்தன்,மாவட்ட மகளிர் அணி முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் சரவணன், சின்னராஜ், காளிராஜ், உமா மகேஸ்வரன், நிர்வாகிகள் பாபு கதிரேசன், முள்ளிகுளம் சங்கர், சோடா குழந்தைவேல்,கணேஷ்குமார் என்ற திரவியம், மகளிர் அணி நிர்வாகிகள் அமுதா பாலசுப்ரமணியம்,மாரியம்மாள், ராமலட்சுமி, சமுத்திரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தென்காசியில் திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்றது

தென்காசியில் திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்தலைமையில்நடைபெற்றது.

தென்காசி சிவந்தி நகர் பகுதியில் அமைந்துள்ள தெற்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் தென்காசிதெற்குமாவட்டத்திற்கு உட்பட்ட தென்காசி, கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்திமுகநிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர்வே.ஜெயபாலன் தலைமை வகித்தார். தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் கலை கதிரவன், குணசேகரன் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல்திருத்தம்தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. இதில் நகர செயலாளர்கள் சாதிர், கணேசன், வெங்கடேசன், அப்பாஸ், ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ், சீனித்துரை, சேக்முகமது, அ;ன்பழகன், அழகுசுந்தரம், ஜெயா, மணிகண்டன், பேரூர் செயலாளர்கள் சுடலை, முத்தையா, கோபால், சிதம்பரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

## ஆலங்குளத்தில் இருந்து

# தோரணமலை, பாபநாசத்திற்கு புதிய பேருந்து சேவை முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் தொடங்கி வைத்தார்

ஆலங்குளத்தில் இருந்து தோரணமலை




மற்றும் பாபநாசத்திற்கு புதிய பேருந்து சேவையை முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ்பாண்டியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பேருந்து நிலையத்தில் இருந்து புதிய வழித்தடத்தில் தோரணமலை முருகன் கோவிலுக்கும், மற்றும் பாபநாசத்திற்கு புதிய பேருந்துகள் இயக்க தொடக்க விழா நடைபெற்றது. ஆலங்குளம் முன்னாள் எம்.எல்.ஏ.மனோஜ்பாண்டியன் கொடியசைத்து பேருந்து சேவையை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆலங்குளம் யூனியன் சேர்மன் திவ்யா மணிகண்டன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் பிரபாகரன், ஒன்றிய திமுக செயலாளர்கள் பொன்செல்வன், மகேஷ்மாயவன், ஜெயக்குமார்,சிவகுமார், நகர செயலாளர் நெல்சன், பொருளாளர் சுதந்திரராஜன், முன்னாள் ஊராட்சி தலைவர் சௌ.ராதா, ரவிசுப்பிரமணியன் மற்றும் போக்குவரத்து துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க ஆலங்குளம் தோரணமலை, ஆலங்குளம் பாபநாசம் ஆகிய வழித்தடங்களில் இரண்டு புதிய பேருந்து ஆலங்குளம் யூனியன்தலைவி திவ்யாமணிகன்டன் சேவைகளை துவக்கி வைத்தார், அருகில் அரசு ஒப்பந்ததாரர் மணி கண்டன் மற்றும்கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☏ +919444082959

# எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுடன் தங்கி பயிற்சி பெறும் திட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டையில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்., வேளாண் அறிவியல் கல்லூரியை சேர்ந்த ரோஜர்ஸ் குழு மாணவர்கள் கிராம வேளாண் பணி அனுபவத்திட்டத்தின் ஒருப்பகுதியாக, கல்லூரி முனைவர் டாக்டர் M.ஜவஹர்லால், பேராசிரியர்கள் ( R.ராஜசேகரன், M.R.நவீன்குமார், A. முகமது இக்ஷானுல்லா,T. குங்கும செல்வன், சஷ்மிதா )மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர். R.மகேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின்படி,இன்று05.122025உலகமண்தினத்தையொட்டி எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்களின் சார்பில் காலை 9.30 மணியளவில் கடப்பாக்கத்தில் உள்ள திரு. பெ.கிருஷ்ணா அரசு மேல்நிலைப்பள்ளியில் "ஆரோக்கியமான நகரங்களுக்கு ஆரோக்கியமான மண்" என்ற தலைப்பில் மாணவர்கள் பேரணி நடத்தப்பட்டது இப்பேரணியை பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் வகுப்பாசிரியர்கள் கலந்துக்கொண்டு தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினர்....பேரணி முடிந்தபின் கல்லூரி மாணவர்களின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு "மண்ணின் மைந்தன் உழவன்" என்றதலைப்பில் கட்டுரை போட்டி மற்றும் "மரம் வளர்ப்போம், உயிர் காப்போம்" என்ற தலைப்பில் ஓவியப்போட்டியும் நடத்தப்பட்டன இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கல்லூரி மாணவர்கள் பரிசளித்து மகிழ்ந்தனர். இறுதியில் பள்ளியின் விளையாட்டு மைதானத்தை சுற்றி பத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் கல்லூரி மாணவர்களின் சார்பில் நடப்பட்டன. ரோஜர்ஸ்குழுவேளாண்மாணவர்கள்(ச.பிரபாகரன், க.ஆதவன், பா.நித்தியானந்தம்,

ந.ம.சுகதக்க்ஷணன் வே.சசிதரன், சே.ஹரிஹரன், நா.சாய் கார்த்திக், வே.லோகேஷ், ச.ரோகித், ந.ஷேக் பர்ஹான் ) ஆகியோர் உள்ளனர்.



கோவை மேற்கு மண்டல காவல்துறை தலைவர் செந்தில்குமார் (ஐபிஎஸ்) நேற்று (05.12.2025) ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வருடாந்திர ஆய்வை மேற்கொண்டார். இந்த ஆய்வில் வருகை பதிவேடு, எப்.ஐ.ஆர். பைல்கள் உள்ளிட்ட ஆவணங்களை பரிசோதித்து, தொடர்பான தகவல்களை கேட்டறிந்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா மற்றும் காவல்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

# மதுராந்தகம் நகர அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நினைவு நாள் நகர கழக செயலாளர் பூக்கடை கே.சி.சரவணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகரம் அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவிஜெயலலிதா 9ம் ஆண்டு நினைவு நாளையொட்டி புரட்சித்தலைவர் எம்ஜிஆர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புரட்சித்தலைவி அம்மா திருவுருவப் படத்திற்க்கு மாலை அணிவித்து மலர்தூவி மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தினர் இந்த நிகழ்ச்சியை மதுராந்தகம் நகரக்கழகசெயலாளர் பூக்கடை கே சி சரவணன், மதுராந்தகம் நகர அம்மா பேரவை செயலாளர் வழக்கறிஞர் எம்பி சீனிவாசன் மதுராந்தகம் நகர துணைச் செயலாளர் முத்து நகர மன்றகவுன்சிலர் தேவி வரலட்சுமி ஜமீன் காதர் மொய்தீன் உள்ளிட்ட அதிமுக கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





# அச்சிறுப்பாக்கம் அருகே ஒரத்தி ஊராட்சியில் ஜெயலலிதா நினைவு நாள்

## திருவுருவப் படத்திற்கு மகளிரணி ஒன்றிய செயலாளர் லோகாம்பாள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 9ம் ஆண்டு நினைவு நாளையொட்டி

ஒரத்தி ஊராட்சியில் மகளிரணி ஒன்றிய செயலாளர் ஆர். லோகாம்பாள் ரங்கராஜன் தலைமையில் பஜார் வீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மெழுகுவர்த்தி ஏந்தி பேரணியாக ஊர்வலம் சென்று புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்ட இடத்தில் மலர் தூவி மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தினர் இந்த நிகழ்ச்சி ஒன்றிய கழக அவைத்தலைவர் சி.சந்திரபாபு முன்னிலையில் ஒரத்தி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.மலர்விழி அருள் விவசாய பிரிவு ஒன்றிய கழகச் செயலாளர் சி.ஆறுவேல் எம்ஜிஆர் மன்ற ஒன்றிய செயலாளர் கே. பன்னீர்செல்வம் அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் எஸ். ரவீந்திரன் மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் ஏ.நஸ்ருதீன் மாணவர் அணி ஒன்றிய செயலாளர் இ.வி.கண்ணன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கோகுல் விக்னேஷ் வினோத்களத்தூர்வேலு முருகன் அன்பழகன் கபிர்தாஸ் மேனகா உள்ளிட்ட பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்

# ஈரோடு மாநகராட்சி 12வது வார்டில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு அறுசுவை விருந்து






ஈரோடு மாநகராட்சி 12வது வார்டு, ஈ.பி.பி நகரில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, ஈரோடு மாநகராட்சி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆ.ஜெகதீசன் தலைமையில் பள்ளியில் பயிலும் சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு தலைவாழை இலையில் பாயசத்துடன் கூடிய காளான் பிரியாணி விருந்துக்கு ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் விஸ்வநாதன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் கருணாதேவி, பள்ளி தலைமை ஆசிரியர் அன்புச்செல்வி, முன்னாள் பெரிய சேமூர் தலைவர் வைரம் பெரியசாமி, பகுதி அவைத்தலைவர் செ.க.துரைசாமி, வட்டக் கழக செயலாளர் வினோத்குமார், வட்ட அவைத் தலைவர் சந்திரன், மற்றும் சூளை பொன் பூபதி, அமானுல்லா, ராஜா பாய், அப்பில், குமார், தர்மராஜன், நவீன் மில்ஸ் செல்வம், பாத்திரம் மணி மற்றும் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர் செந்தில்குமார் உட்பட பலர் இருந்தனர்.



சேலம் மாவட்டம் ஓமலூர் பேருந்து நிலையம் அருகில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவு தினம் ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். மணி. பி.ஏ., எல்எல்.பி அவர்கள் தலைமையில் ஜெயலலிதா வின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ வெற்றிவேல்,விக்னேஷ் மற்றும் கட்சி நிர்வாகிகள்,தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## இப்கோ நானோ உரங்கள் பயன்படுத்தி வந்த விவசாயி, விபத்தில் மரணம் அடைந்ததை தொடர்ந்து அவரது குடும்பத்தினருக்கு இலவச விபத்து காப்பீட்டுத் தொகையை வழங்கினார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இப்கோ நானோ உரங்கள் பயன்படுத்திய விவசாயி, விபத்தில் மரணம் அடைந்ததை தொடர்ந்து, அவரது குடும்பத்தினருக்கு இலவச விபத்து காப்பீட்டுத் தொகையை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வழங்கினார்.

ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை வட்டாரம் பட்டலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை சேர்ந்த விவசாயி திரு. சுப்ரமணி நானோ யூரியா 3 பாட்டில்கள் மற்றும் நானோ டி ஏ பி 2 பாட்டில்கள் ஆகமொத்தம் 5 பாட்டில்களை வாங்கி பயன்படுத்தினார். அவர் எதிர்பாராத விதமாக கடந்த ஜூன் மாதம் 12 ஆம் தேதி சாலை விபத்தின்போது உயிரிழந்தார். தற்போது அவரது குடும்பத்திற்கு விபத்து காப்பீட்டு தொகையான 50,000/- ரூபாய் இப்கோ நிறுவனத்தின் சார்பாக ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வழங்கினார். இந்தியாவின் நம்பர் 1 கூட்டுறவு உர நிறுவனமான இப்கோ நிறுவனம் கடந்த 2022 ஆம் ஆண்டு விவசாயிகள் வழக்கமாக பயன்படுத்தும் 45 கிலோ யூரியா மூட்டை மற்றும் 50 கிலோ டி.ஏ.பிக்குமாற்றாகஅதேஅளவு பயன் அளிக்கும் திறன் கொண்ட நானோ யூரியா மற்றும் நானோ டி ஏ பி உரங்களை அறிமுகப்படுத்தியது.

இந்த உரங்கள் இலை வழியாக தெளிக்கும்போது மண்வளத்தை பாதிக்காமல் அதிக அளவு மகசூல் பெற உதவி செய்கிறது. இந்த புதியதலைமுறைநானோ உரங்களை ஊக்குவிப்பதற்காக இப்கோ நிறுவனம் சங்கடஹரன் பீமா யோஜனாஎன்றபெயரில் இலவச விபத்து காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.இத்திட்டத்தின் கீழ் நானோ உரங்கள் வாங்கும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஒரு பாட்டிலுக்கு 10,000 வீதம் இலவச விபத்து காப்பீடு வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஆண்டுக்கு 20 பாட்டில்கள் வரை இரண்டு லட்சம் ரூபாய் விபத்து காப்பீடு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.இப்கோநானோ உரங்கள் குறைந்த விலையில் மண்வளத்தை பாதுகாப்பதுடன் விவசாயிகளின் இலவச விபத்து காப்பீடு நண்பனாகவும் விளங்குகிறது. நானோ உரங்கள் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உரக்கடைகளிலும் கிடைக்கின்றன.

இந்நிகழ்வில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா, ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைப்பதிவாளர் / முதன்மை வருவாய் அலுவலர் பெ.பிரகாஷ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# ஐம்பெரும் காப்பியமான வளையாபதி பாடல்கள் பாரத தாயின் ஓவியமாக வரைந்த ஆசிரியருக்கு பாராட்டு

செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஒன்றியம்






பெருக்கரணை ஐம்பெரும் காப்பியமான வளையாபதி பாடல்கள் பாரத தாயின் ஓவியமாக வரைந்த ஆசிரியருக்கு தேசிய சமூக நல அமைப்பு மனித உரிமை பிரிவு சார்பில் பாராட்டு சான்றிதழ் வழங்கினர்.

பெருக்கரணைஊராட்சியில் நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர் ஜா.இராகேஸ்வரி முனைவர் ஷியாமளா சண்தீப் நிறுவனர் நடத்தும் 13-வது உலக சாதனை குழுவில் ஐம்பெரும் காப்பியமான வளையாபதி பாடல்கள் அனைத்தும் பாரதத்தாயின் ஓவியத்தில் எழுதியுள்ளார். அவர் தமிழ் பற்றை பாராட்டி NSWF தேசியசமூகநலஅமைப்பு மனித உரிமைப்பிரிவு செங்கல்பட்டு மாவட்டக் குழுவினர் சார்பில் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்து யாராட்டு சான்றிதழ் வழங்கினர். இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் எம். வேலு மாநில தலைவர் என்.வெங்கடகிருஷ்ணன், மாவட்ட துணை செயளாலர்

என்.ஏஜாஸ், மாவட்ட மாணவர் அணி தலைவர் எ.ஆறுமுகம், அச்சிறுப்பாக்கம் ஒன்றிய தலைவர் பிரபுராஜ்,தமிழ் பற்றாளர் தா.இராஜேஸ்வரியை தேசியசமூகநலஅமைப்பு மனித உரிமை பிரிவு சார்பில் வாழ்த்தினர்.

அப்போது ஒன்றிய நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் பலர் உடனிந்தனர்.



# மானாமதுரை அமமுக சார்பில் முன்னாள் முதலமைச்சரின் ஜெயலலிதாவின் 9ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி அலுவலகம் முன்பாக முன்னாள் முதல்வரும், அஇஅதிமுக முன்னாள் பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதாவின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகள் சார்பில் மலர்தூவிநினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் அம்மா மக்கள் முன்னேற்றகழகம் புரட்சித்தலைவி இதய தெய்வம் ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி செலுத்தும் வகையில் மக்கள் செல்வர் டிடிவி தினகரன் மற்றும் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் தேர்போகி பாண்டி ஆகியோரின் வழிகாட்டுதலில் மானாமதுரை கிழக்கு நகர் கழகம் சார்பாக நகர செயலாளர் எஸ். பி. மோகன் ஏற்பாட்டில் மானாமரையில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்டக் கழக துணை செயலாளர் முருகேஸ்வரி சரவணன்,எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் சன்னதி புதுக்குளம் சரவணன், கிழக்கு நகர அவைதலைவர் எஸ். கண்ணன், மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பொன் முத்துராமலிங்கம், கிழக்கு நகர ஒன்றிய கழகச் செயலாளர் பாக்கியம், நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பாக நினைவு அஞ்சலி செலுத்தினர்.

# மானாமதுரை வழிவிடு முருகன் கோயில் அருகில்

## பிரதான சாலையில் ஏற்பட்டுள்ள பாதாள பள்ளத்தை சரி செய்திட முன் வருமா மாவட்ட நிர்வாகம்?



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பழைய பேருந்து நிலையம், ரயில்வே கேட்டை அடுத்துள்ள வழிவிடு முருகன் கோயில் அருகில் பிரதான நெடுஞ்சாலையில் அபாயகரமான கிணறு போல் காட்சியளிக்க கூடிய அதல பாதாள பள்ளம் ஏற்பட்டு, வாரத்திற்கு மேலாக சரி செய்யப்படாமல் பேரிக்காடு போடப்பட்டதோடு இருந்து வரும் அவல சூழ்நிலை நீடித்து வருகிறது. கோவில் விசேஷம், திருமண நிகழ்ச்சி என தினம்தோறும் ஆயிரக்கணக்கானோர் உபயோகிக்கும் இக்குறிப்பிட்ட பிரதான சாலையில் ஏற்பட்டுள்ள இப்பள்ளம் காரணமாக வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இரவு நேரத்தில் வாகன விபத்து ஏற்படும் சூழ்நிலை நீடிப்பதால்,பொதுமக்கள் மிகவும்பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். எனவே உடனடியாக மாவட்ட நிர்வாகம்,நெடுஞ்சாலைத்துறை,நகராட்சி நிர்வாகம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் தலையிட்டு நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள அதல பாதாள பள்ளத்தை சரி செய்து, விபத்து மற்றும் பெரும் அசம்பாவிதம் ஏற்படும் அபாயகரமான சூழலை தடுத்திட, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தினர்.





மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா ௯ ஆம் ஆண்டு நினைவு நாளை ஈரோடு மாநகர் பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள அவரது சிலைக்கு ஈரோடு மாநகர அஇஅதிமுக மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.வி. ராமலிங்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இதில் முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கே.எஸ்.தென்னரசு, முன்னாள் ஈரோடு மாநகராட்சி மேயர் மல்லிகா பரமசிவம், முன்னாள் துணைமேயர் கே.சி பழனிச்சாமி, பெரியார் நகர் பகுதி அ.தி.மு.க செயலாளர் மனோகரன், பேரவை மாவட்ட இணை செயலாளர் வீரக்குமார், மாவட்ட எம்.ஜி .ஆர் மன்ற தலைவர் மீன் ராஜா, முன்னாள் கவுன்சிலர் கே.எஸ்.கோபால் ,சின்னு என்ற சண்முகம், மாமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தங்கமுத்து, மற்றும் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக பலர் கலந்து கொண்டனர்.



மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ௯ம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் அதிமுக கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் குமார் தலைமையில் அதிமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கினர். மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஒன்பதாம் ஆண்டு நினைவு தினத்தை எட்டி கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் பகுதியில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு மலர் கூறி மரியாதை செலுத்து முயற்சி நடைபெற்றது கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான குமரகுரு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஏராளமான அதிமுகவின் கலந்துகொண்டு ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



ஈரோடு மாநகர் மரப்பலாம் கள்ளுக்கடை மேடு பகுதியில், உள்ள பழமை வாய்ந்த அருள்மிகு கொண்டத்து பத்ரகாளியம்மன் கோவிலில், நேற்று காலை 6.30 மணிக்கு, வெள்ளிக்கிழமை சிறப்பு பூஜை நடந்தது. அம்மனுக்கு பால், தயிர், இளநீர், சந்தன அபிஷேகங்கள் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



ஈரோடு மாநகராட்சி பெரிய அக்ரஹாரம் பகுதியில், தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ௯ஆம் ஆண்டு நினைவஞ்சலி நேற்று அனுசரிக்கப்பட்டது. இதில் அதிமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் பலரும் அவரது சேவைகளை போற்றிய விதமாக அஞ்சலி செலுத்தினர்.

## இரண்டு வருட போராட்டத்திற்கு பிறகு

## ஈரோடு நிரந்தர மக்கள் நீதிமன்றத்தின் தலையிட்டால் தனது அசல் பனிரெண்டாம் வகுப்பு சான்றிதழ்களைப் பெற்ற கல்லூரி மாணவி

இரண்டு வருட போராட்டத்திற்கு பிறகு ஈரோடு நிரந்தர மக்கள் நீதிமன்றத்தின் தலையிட்டால் தனது அசல் பனிரெண்டாம் வகுப்பு சான்றிதழ்களைப் பெற்ற கல்லூரி மாணவி

தனியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் படிக்கும் மாணவிக்கு பனிரெண்டாம் வகுப்பு அசல் சான்றிதழ்களை இரண்டு வருட கால போராட்டத்திற்கு பிறகு ஈரோடு நிரந்தர மக்கள் நீதிமன்றம் மேற்கொண்ட நடவடிக்கையால் கிடைத்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் தனியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் கல்லூரி மாணவி குடும்ப சூழ்நிலை காரணமாக தனது படிப்பை தொடர இயலவில்லை என்றும் தான் கல்லூரி சேர்க்கையின் பொழுது கல்லூரி நிர்வாகத்திடம் கொடுத்த பன்னிரண்டாம் வகுப்பு அசல் கல்வி சான்றிதழ்களை பெறுவதற்கு பலமுறை கல்லூரி நிர்வாகத்திடம் அணுகிய போது கல்லூரி நிர்வாகம் கொடுக்க மறுத்து விட்டதால் மாணவி நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் மனு கொடுத்திருந்தார்.

இம்மனுவை ஏற்றுக் கொண்ட நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதிபதி வி.பி.சுகந்தி கல்லூரி நிர்வாகத்தை அழைத்துப் பேசி மாணவியின் அசல் பனிரெண்டாம் வகுப்பு சான்றிதழ்களை கல்லூரி நிர்வாகத்திடம் இருந்து பெற்று தந்தார்.



## டாக்டர் தத்துராவ் நினைவு அறக்கட்டளையில் மாற்றுத்திறனாளிகள் தினவிழா

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சாம்பியன் விருது வழங்கி பாராட்டினார்

செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருகே உள்ள அகிலி பாத்வே பள்ளிக்கு பெருமைமிகு தருணமாக திகழும் 16 வயதான மாணவி ஸ்ருத்திகா, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கரங்களால் சாம்பியன் விருது வழங்கி பாராட்டினார். மேலும் கடந்த ஏழு ஆண்டுகளாக பாத்வே பள்ளியில் பயிலும் ஸ்ருத்திகா, செரிப்ரல் பால்சி என்ற நரம்பியல் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர். பள்ளியில் சேர்ந்த தொடக்க நாட்களில் செயல்களில் மந்தமாகவும், வருகையில் ஒழுங்கின்மையும் காணப்பட்டது. ஆசிரியர்களின் தொடர்ந்த ஊக்கமும், பெற்றோரின் உறுதுணையும், தீவிர பயிற்சியும் அவரை பெரும் முன்னேற்றத்திற்கு இட்டுச் சென்றது.

விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்குவிக்கப்பட்ட ஸ்ருத்திகா, கடுமையான பயிற்சியின் பயனாக மாவட்ட அளவில் முதல் இடமும், தொடர்ந்து மாநில அளவில் முதல் இடமும் பெற்றார்.மாநில அளவிலான போட்டிகளில் கிரிக்கெட் பந்து எறிதல் போட்டியில் முதலிடம் பெற்று, தன்னம்பிக்கையும் திடமான மனதையும் வெளிப்படுத்தினார்.

மாற்றுத்திறனாளிகளின் சாதனைகளை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் இந்த பிரமாண்ட விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விழாவில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன், அரசுச் செயலர் ஸ்.மதுமதி, ஐ.ஏ.எஸ், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் எம்.லட்சுமி, ஐ.ஏ.எஸ், மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு துறை உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். பாத்வே சார்பில் இணை நிறுவனர் மற்றும் இயக்குநர் டாக்டர் சந்திரா பிரசாத், சென்னை பாத்வே மைய முதல்வர் ஜெயசீலி மற்றும் ஆசிரியர்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

மேலும், தென் சென்னை அணியும் மொத்த சாம்பியன் கோப்பையை வென்று பாத்வே நிறுவனத்திற்கு மேலும் பெருமை சேர்த்தது. ஸ்ருத்திகாவின் இந்த சாதனை, தன்னம்பிக்கை, தொடர்ச்சியான முயற்சி மற்றும் சரியான ஆதரவு இருந்தால் எந்த தடையும் வெற்றியாக மாறும் என்பதற்கான வாழும் எடுத்துக்காட்டாக காணப்பட்டது.



பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கைதை கண்டித்து திங்கள்சந்தையில் சாலை மறியல் நடந்தது. திங்கள்நகர் காமராஜர் பஸ் ஸ்டாண்ட் முன்பு கிழக்கு மாவட்ட தலைவர் கோபகுமார் தலைமையில் குவிந்த பாஜகவினர் பஸ் ஸ்டாண்ட்டை மறித்து அமர்ந்து தமிழக அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். மறியலில் ஈடுபட்ட மாவட்ட தலைவர் கோபகுமார், வழக்கறிஞர் சிவகுமார், இரணியல் பேரூராட்சி தலைவர் ஸ்ரீ கலா முருகன், திங்கள்நகர் பேரூராட்சி கவுன்சிலர்கள் ஜெயசேகரன், முத்துகுமரன், நிர்வாகிகள் பிரமோத், பத்மகுமார் உட்பட 31 பேரை போலீசார் கைது செய்தனர்.அவர்கள்அனைவரும்அருகில்உள்ளதிருமணமண்டபத்தில்தங்கவைக்கப்பட்டுபின்னர்விடுவிக்கப்பட்டனர். இது சம்பந்தமாக 31 பேர் மீது இரணியல் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

## யானை போன்ற பிற வனஉயிரினங்கள் மின்சாரம் தாக்கி இறக்கும் நிகழ்வுகளில், அதற்கு காரணமானவர்கள் மீது கடுமையான் நடவடிக்கை எடுக்கப்படும்

ஈரோடு மாவட்டம், ஈரோடு வனக்கோட்டம், அந்தியூர் வனச்சரகம், பர்கூர் மலைப்பகுதியில் ஒந்தனை வனக்காவல் சுற்றுக்குட்பட்ட கடைஈரெட்டி பழங்குடியின கிராமத்தை சார்ந்த ரமேஷ் த/பெ வைரன் என்பவர் வருவாய் புறம்போக்கு நிலத்தில் விவசாயம் மேற்கொண்டு வரும் இடத்தில் 04.12.2025 அன்று யானை ஒன்று வேலி அருகே இறந்து கிடப்பதை அறிந்த வனத்துறைப்பணியாளர்கள், அந்தியூர் வனச்சரக அலுவலர் தலைமையில் சம்பவஇடத்திற்குநேரில் சென்று களவிசாரணை மேற்கொண்டனர். முதற்கட்ட விசாரணையில் இறந்த யானை மின்சாரத் தாக்குதல் காரணமாக 6T 601 தெரியவந்துள்ளது.இக்குற்ற சம்பவம் குறித்து வனஉயிரின வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இருப்பினும் யானையின் இறப்பிற்கான உண்மையான காரணம், இதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (Standard Operating Procedure ) பின்பற்றி பிரேத பரிசோதனை மற்றும் ஆய்வக அறிக்கை பெற்ற பின்னரே உறுதி செய்ய இயலும்.



யானை இறந்த நிகழ்வானது வடபர்கூர் காப்புக்காட்டிலிருந்து சுமார் 980 மீட்டர் தொலைவில் வருவாய் புறம்போக்கு நிலத்தில் நடைபெற்றுள்ளது. மேற்படி வருவாய் புறம்போக்குநிலத்தில்அமைக்கப்பட்டுள்ள மின்வேலியினை ஈரோடு வனக்கோட்ட வனத்துறைப்பணியாளர்கள் கடந்த 23.11.2025 அன்று ஆய்வு மேற்கொண்டதில், அப்போது 12V நேரடி மின்னோட்டத்தில் (DC Current) செயல்படும் மின்கலத்தால் அமைக்கப்பட்டுள்ள மின்வேலி செயல்பட்டு வந்துள்ளது. அந்த இடம் மட்டுமில்லாமல், அப்பகுதியில்அமைக்கப்பட்டுள்ள அனைத்து மின்வேலிகளை களப்பணியாளர்கள் அடிக்கடி களத்தணிக்கை மேற்கொண்டு உரிய தணிக்கை விவரங்களை அவ்வப்போது பதிவு செய்தும் அறிக்கையாகவும் சமர்ப்பித்துள்ளனர்.

மேலும், தற்போது யானை இறந்த இடத்தில் மின்வேலி அமைத்தவரின் தமிழ்நாடு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்வேலிகளை ஆய்வு செய்து, மின்வேலிகள் (பதிவுசெய்தல் மற்றும் முறைப்படுத்துதல்)விதிகள், 2023-யில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி அமைக்கப்படாததை சுட்டிக்காட்டி திருரமேஷ் த/பெ வைரன் என்பவருக்கு ஏற்கனவே அறிவிப்பும் (Notice) வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. மின்சாரம் தாக்கி யானை இறப்பதனை தவிர்க்கவும், தமிழ்நாடு வனத்தையொட்டி அமைக்கப்பட்டுள்ள மின்வேலிகள் (பதிவுசெய்தல் மற்றும் முறைப்படுத்துதல்)விதிகள், 2023-யினை முறையாக செயல்படுத்திடவும் களப்பணியாளர்கள் மற்றும் சிறப்பு குழுவினர் தொடர்ந்து ஒவ்வொரு மின்வேலிகளையும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அதற்குரிய உபகரணங்களை கொண்டு உயர் அழுத்த மின்சாரம் செல்லுவதை கண்டறிய தீவிர கள ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

இதுபோன்ற அசம்பாவிதகள் நிகழாவண்ணம், பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட்டு தமிழ்நாடு மின்வேலிகள் (பதிவுசெய்தல்மற்றும்முறைப்படுத்துதல்) விதிகள், 2023-யின்படி மின்வேலிகள் அமைத்து முறையாக பராமரிக்கவும் ஆபத்து நேரங்களில் தானாகவே மின்னிணைப்பு துண்டிக்கும் அமைப்பினை ஏற்படுத்திட வேண்டும். இதுபோன்று யானைபோன்ற பிற வனஉயிரினங்கள் மின்சாரம் தாக்கி இறக்கும் நிகழ்வுகளில், அதற்கு காரணமானவர்கள் மீது வனஉயிரினம் (பாதுகாப்பு)சட்டம்,1972-யின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான வழக்குகளில் குற்றம் நிருபனமாகும் போது, மூன்றாண்டுகளுக்கு குறையாமலும் அதிகபட்சமாக ஏழு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் கிடைக்கப்பெறும்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.